# ஒப்பியல் நோக்கில் தொல்காப்பியரின் நோக்கும் – சேமேந்திரரின் ஒளசித்யமும்

## A Comparative Perspective: Tholkappiyar's Nokku and Kshemendra's Auchityam

**சு.தமிழ்ச்செல்வன்,**
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, தமிழ்நாடு மத்தியப் கலைக்கழகம்,
திருவாரூர் – 610005. vstamil481@gmail.com
**க.இரமேஷ்,**
பேராசிரியர், தமிழ்த்துறை,
தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர் – 610005.
**S. Tamilselvan**,
Ph.D. Scholar, Department of Tamil, Central University of Tamil Nadu,
Thiruvarur – 610005. vstamil481@gmail.com
**K. Ramesh**,
Professor, Department of Tamil, Central University of Tamil Nadu, Thiruvarur – 610005.

**Abstract**

The poetic element called 'Nokku' (*நோக்கு*), mentioned by Tholkappiyar, comprises five components, ranging from Maatthirai (*மாத்திரை* - metrical unit) to Adi (*அடி* - line). It is this element of 'Nokku' that bestows the status of classicism upon a creation. Through this, the importance of Nokku can be understood. Auchityam (*ஔசித்யம்*) is a theory developed by Kshemendra in Sanskrit. Auchityam can be considered the soul or lifeline of poetry. It can be interpreted as appropriateness or suitability. In a poem or epic, Auchityam appears in twenty-seven places, from the word itself to the benediction. This article examines the correlation between Tholkappiyar's poetic element 'Nokku' and Kshemendra's concept of appropriateness, 'Auchityam', and compares these two.

**Keywords:** Tholkappiyar, Nokku, Auchityam

### முன்னுரை

தொல்காப்பியர் குறிப்பிடும் நோக்கு என்ற செய்யுள் உறுப்பு மாத்திரை தொடங்கி அடி வரை ஐந்து உறுப்புக்களை கொண்டதாக அமைகிறது. படைப்புக்கு செவ்வியல் எனும் தகுதியினை தருவதே நோக்கெனும் உறுப்புதான். இதன் மூலமாக நோக்கின் முக்கியத்துவத்தை அறியமுடிகிறது. ஒளசித்யம் சேமேந்திரர் வடமொழியில் உருவாக்கிய கோட்பாடாகும். ஒளசித்யம் என்பது காவியத்தின் ஆன்மா அல்லது உயிர்நாடி எனலாம். இதற்கு பொருத்தப்பாடு அல்லது தகுதிப்பாடு எனப்பொருள் கொள்ளலாம். ஒரு காவியத்தில் சொல் முதல் வாழ்த்து வரை இருபத்தியேழு இடங்களில் ஒளசித்யம் இடம்பெறும். தொல்காப்பியர் குறிப்பிடும் நோக்கு என்ற செய்யுளுறுப்புடன் சேமேந்திரரின் ஒளசித்யம் என்ற பொருத்தப்பாடு பொருந்திவருகிறது என்று ஆராய்வதோடு, இவ்விரண்டையும் ஒப்பிட்டு இக்கட்டுரை ஆராய்கிறது.

### நோக்கு

மாத்திரை, எழுத்து, அசை, சீர், அடி என ஐந்துவகைப்படும் நோக்கினை தொல்காப்பியர் நூற்பா வழியாக

> **மாத்திரை முதலா அடிநிலை காறும்**
> **நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே** [1]

நோக்குதல் காரணம் நோக்கு என்பதை நோக்குதலாகிய காரணம் நோக்கு எனக்கொண்டு ஆராயவேண்டியுள்ளது "நோக்கு வேறு நோக்குதற்கு காரணமான திறன் வேறு எனப்பிரிக்காமல் கூறுவது படைத்தலுக்கும் படித்து சுவைத்தலுக்கும் உள்ள இயைபை உணர்த்துகிறது"[2]. எனவே படைப்பாளி நோக்குப்பட படைத்த படைப்பை வாசகன் நோக்கி உணருதல் வேண்டும். அப்போதே நோக்கையறிய முடியும். அதற்கு இருவரின் கவனமும் அவசியம், எவ்வாறு அறிவது எனில் ஒரு செய்யுளில் உள்ள மாத்திரை, எழுத்து, அசை, சீர், அடி, முதலியவை எவ்வாறு வாசகனுக்கு செய்யுளின் மையப்பொருளை புலப்படுத்துகிறது. இதற்கு மரபு பற்றிய புரிதல், இலக்கிய அறிவு, செய்யுள் உறுப்பு குறித்த சிறப்பறிவு, முதலியவை வாசகனுக்கு தேவை."நோக்கு என்பது ஒரு கலைச்சொல் என்ற முறையில் திட்டவட்டமான கருத்து இன்னும் உருவாகவில்லை ஒரு சொல்லே கலைச்சொல்லாகவும் பொதுச்சொல்லாகவும் பயன்படுத்தப்பட்டிருப்பது அந்த சூத்திரத்திலே பொதுச்சொல்லாகவும் கலைச்சொல்லாகவும் கையாண்டிருப்பதும் காரணங்கள் ஆகும் "[3] எனவே நோக்கு அறிய வாசகனுக்கு உலகம், வாழ்க்கை, சமூகம், அழகியல் முதலியவைக் குறித்த அடிப்படை புரிதல் மூலமாக நோக்கு, செய்யுளில் அமையும் இடங்களை வாசகன் அறிய இயலும் ஒரு வாசகன் எந்த காரணத்திற்காக ஒரு படைப்பில் உள்ள உறுப்புக்களை கண்டு மனத்தால் ஆராய்கிறானோ அந்த காரணம் தான் நோக்கு. ஒரு படைப்பை வாசகன் அணுகும் போது வாசகனுக்கு தக்கவாறு படைப்பு தனக்குள் வைத்துள்ள பல பொருண்மைகளை வெளிக்கொணர்கிறது. ஒரு பனுவலின் பொருண்மையை கட்டமைப்பதில் வாசகரின் பங்கு குறித்து வாசகர் எதிர்வினை கோட்பாடு கூறுகிறது. அவ்வகையில் படைப்பாளி, படைப்பு, வாசகன் என்ற முக்கோண நிலையில் வாசகனே மையமாக முக்கியத்துவம் பெறுகின்றான்.

**ஔசித்யம்**

காவியத்தில் சொல்ல வரும் பொருளுக்கு உகந்த அணியை கையாள்வது படைப்பாளி திறன். படைப்பினுள் பயன்படுத்தப்படும் அணியானது வாசகனுக்கு மெய்ப்பாடு தோன்றும் விதமாக அமைய வேண்டும். அவ்வாறு தோன்றுமெனில் அதற்கு ஔசித்யமே காரணம் எனலாம். எனவே தகுந்த இடத்தில் அணிகளை பொருத்தமுடன் அமைக்க தெறிந்தவனே படைப்பாளி "தகுந்த இடத்தில் பொருத்தமாக அமைவதால் தான் அணிகளாகின்றன. தகுதிப்பாடு உடைய குணங்கள் மட்டுமே குணங்களாகத் திகழ்கின்றன"[4] எனவே தகுதிப்பாடு (பொருத்தப்பாடு) இது இருபத்தியேழு இடத்தில் தோன்றும் என்பது சேமேந்திரர் கருத்து அவை 1. பதம், 2. வாக்கியம், 3.பிரபந்தார்ந்தம் (காவியப்பொருள்),4.குணம்,5.அலங்காரம்,6.ரசம்,7.வினைச்சொல்,8.காரகம்(வேற்றுமை), 9. பால், 10.வசனம், 11.அடைமொழி (உரிச்சொல்), 12. உபசர்க்க (உருபு பொருத்தம்), 13. இடைச்சொல் (நிபாதம்), 14. காலம், 15. இடம், 16.குலம், 17. விரதம் (சாதுரியம்), 18. தத்துவம், 19. சத்துவம், 20. கருத்து, 21. இயல்பு, 22. சாரச்சுருக்கம், 23.ஆற்றல் ( பிரிதிபை), 24 பருவம் ( அவஸ்தா), 25.விசாரம்(ஆய்வு), 26. பெயர் 27. வாழ்த்து, இந்த இருப்பத்தியேழு இடங்களும் ஔசித்யம் தோன்றும் இடங்களாகும். இந்த பொருந்தப்பாடு கோட்பாடானது ஒரு காவியத்தின் உயிர்துடிப்பு எனலாம்.

**நோக்கும் – ஔசித்யமும்**

பொருத்தப்பாடு என்ற நிலையில் கவிதையை வாசகன் கானும் போதே ஆராய தொடங்குகிறான். இதன் மூலமாக படைப்பு மதிப்பீடு செய்யப்படுகிறது. மேலும் படைப்பினை பல்வேறு கோணங்களில் அனுகி புதுப்புது பொருளையும் நிலத்திற்கேற்ற கருப்பொருள் பொருத்தம், உவமையாக காட்டப்பட்டுள்ளதையும் காலத்திற்கேற்ற கவிதைமொழி அமைந்துள்ளதா என காண முயலுகிறான்."

ஒசை முதல் பல்வேறு தளங்களில் இயங்கும் கவிதை வாசகனின் சுவை உணர்வில் பட்டுத் தேர்ந்த கவிதை அனுபவமாக உருப்பெறக் கவிதையின் கூறுகள் ஒன்றோடொன்று இயைபுறப் பொருந்தும் சீர்மை இன்றியமையாதது"[7]

| நோக்கு | ஔசித்யம் |
|---|---|
| மாத்திரை, எழுத்து, அசை | 1. பதம், 4. குணம், 8. காரகம்(வேற்றுமை), 9. பால், 10. வசனம், 11. அடைமொழி (உரிச்சொல்12. உபசர்க்க (உருபு பொருத்தம்), 13. இடைச்சொல் (நிபாதம்), |
| சீர் | 17. விரதம் (சாதுரியம்), 19. சத்துவம், 23. ஆற்றல் (பிரிதிபை), |
| அடி | 2. வாக்கியம், 3. பிரபந்தார்ந்தம் (காவியப்பொருள்), 5. அலங்காரம் 6. ரசம், 7.வினைச்சொல், 14. காலம்,15.இடம்,16.குலம், 18. தத்துவம், 20. கருத்து, 21. இயல்பு, 22. சாரச்சுருக்கம், 24 பருவம் ( அவஸ்தா), 25.விசாரம்(ஆய்வு), 26. பெயர் 27. வாழ்த்து, |

நோக்கு, ஔசித்யம் இரண்டும் செய்யுளில் உள்ள உறுப்புக்கள் பொருத்தமுடன் அமைவதின் ஊடாக எவ்வாறு செய்யுள் சிறக்கிறது? பொருத்தமுடன் என்பதனை எந்த காரணத்திற்காக படைப்பாளி படைத்திருப்பார் என வாசகனின் தன்நிலையில் இருந்து காண்பது எனலாம். மாத்திரை என்பது எழுத்துக்கள் இயல்பாக ஒலிக்கும் கால அளவை குறிக்கு "உரையாசிரியர்கள் மாத்திரையால் பொருள் வேறுபடும் நுட்பத்தினைத் தெளிவுபடுத்தியுள்ளனர். இது மட்டுமில்லாமல் மாத்திரை இசைக்குரிய அலகாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதையும் அறியமுடிகிறது "[5] எழுத்தென்பது மொழிக்கு அடிப்படையாக அமைந்த உயிர், மெய், சார்பெழுத்து, தொகைவகை விரியை, குறிக்கிறது. உயிரெழுத்து பன்னிரண்டு, மெயெழுத்து பதினெட்டு, மொத்தம் முப்பது எழுத்தும், சார்ந்து வரக்கூடிய சார்பெழுத்து மூன்றும். "மாத்திரை எழுத்து இரண்டும் செய்யுளுக்குரிய அடிப்படை அலகுகளாகும். தொல்காப்பியர் ஒலிப்பு அடிப்படையிலேயே அரை மாத்திரை உடைய எழுத்து, ஒரு மாத்திரை உடைய எழுத்து, இரண்டு மாத்திரை உடைய எழுத்து என்று வேறுபடுத்துகிறார் வல்லினம், மெல்லினம், என்பன ஓசை அடிப்படையில் வகைப்படுத்தப்பட்ட எழுத்துக்கள் "[6]மெய்யெழுத்து பதினெட்டும் வல்லினம், மெல்லினம், இடையினம், என்று பிரிக்கப்படுகிறது. தொல்காப்பியர் செய்யுளியலில் கூறும் வண்ணம் என்ற உறுப்பினை இங்கே இணைத்துப் பார்க்க வேண்டும். வல்லிசை வண்ணம் – செய்யுளில் வல்லெழுத்து மிக்குவந்து வல்லோசை தருவது வல்லிசை வண்ணம் எனப்படும். வீரம், வெகுளி முதலிய உணர்வுகளைப் புலப்படுத்தும் புலவரின் பாடலில் இவ்வண்ணம் பயின்று வருதல் காணலாம். மெல்லிசை வண்ணம் – மெல்லெழுத்து பயின்று வந்து மெல்லோசை பயப்பது மெல்லிசை வண்ணம். இயைபு வண்ணம் - இடையெழுத்து மிக்குவந்து சமன் ஓசை தருவது இயைபு வண்ணம் எனப்படும். அசை என்பது

**“இயலசை முதலிரண் டேனவை உரியசை”[8]**

இயலசை எனப்படும் நேரசை,நிரையசை. உரியசை என்பது நேர்பசை,நிரைபசை. மாத்திரை, எழுத்து, அசை, மூன்றும் ஔசித்யம் தோன்றும் இடமான பதம், குணம், காரகம், பால், வசனம், அடைமொழி, உருபு, இடைச்சொல், முதலிய இடங்களுடன் பொருத்திப்போகிறது. பதம் – சொல் தகுந்த இடத்தில் அமைந்து அழகு கூட்டுவது.ஒரெழுத்தே சொல்லாக வருவதுண்டு எனவே சொல் மாத்திரை,எழுத்து, அசை மூன்றுமாக வருமெனலாம். குணம் – காதற்சுவைக்கு மென்மையான சொல் நடையும். வீரச் சுவைக்கு வன்மையான சொல் நடையும், அழகு முதலிய நடைச்சிறப்புக்களும் குணம் எனப்படும்.வல்லினம், மெல்லினம், எழுத்துடன் ஒப்பிடலாம். காரகம் - (வேற்றுமை) எட்டு வேற்றுமைகளின் சொற்பிரயோகங்கள் மூலம் பொருத்தம் அமைந்து விளக்கப்படுகிறது. இவை எழுத்து, அசையுடன் பொருந்திப் போகிறது, பால் - சொல்லப்படும் பொருளுக்கேற்ப ஆண்பால், பெண்பால், முதலியவற்றுடன் காவியம் சிறப்புறுமென்பது. வசனம் – வடமொழியில் ஒருமை, இருமை, பன்மை, என்பன வசனம் எனப்படும். அடைமொழி (உரிச்சொல்) – தகுந்த அடைமொழி சேர்த்து. சிறப்பிக்கப்படும் பொருளோடு ஒளிர்கிறது.இவை அசையுடன் பொருந்துகிறது. உருபு – வடமொழியில் உள்ள தனிச்சிறப்புகளில் ஒன்று உபசர்க்கம் ( துணை உருபுகள் ) முன் ஒட்டு உருபுகள்.அசையுடன் பொருந்துகிறது. இடைச்சொல் – தகுந்த இடத்தில் இடைச்சொல் பெய்வதால் காவியத்திற்கு பொருட்சிறப்பு மிகும் உம், மற்று முதலிய இடைச்சொல் கொண்டும் காவியங்களில் பொருட்சிறப்பு மிகும். மற்ற நோக்கு உறுப்பான சீர்,அடி, இரண்டும்

**“ஈரசை கொண்டு மூவசை புணர்ந்துஞ்**
**சீரியைந் திற்றது சீரெனப் படுமே”[9]**

சீரென்பது இசைமைசார் கட்டுமான உறுப்பு எனலாம். ஓசையும் கருத்தும் ஒன்றிணைந்த சொற்களை யாப்பு வழிப்படுத்தும் போது சீர் எனப்படுகிறது. சேமேந்திரர் குறிப்பிடும் ஆற்றல், விரதம், சத்துவம், இவற்றுடன் சீர் பொருந்திப் போகிறது. சத்துவம் – நல்லறிஞரின் சத்துவப் பொருத்தமான சிந்தனைகளும் செயல்களும் ஆய்ந்து தெளிந்து அழகுறுவது போல கவிஞனின் சத்துவம் (சாரம்) உடைய சொற்கள் சமத்காரம் (சாதுரியம்) வெளிப்படுத்துவது. சீரெனப்படுவது இசையுடன் தொடர்புடையது. இவை யாப்பு வடிவத்தின் கட்டுமானபொருள், பாக்களுக்கு தக்க ஈரசைசீர், மூவசைசீர், கொண்டு செய்யுள் யாப்பது. ஆற்றல்(பிரதிபை) - கவியாற்றல் கொண்ட கவிஞனின் காவியம் இசையோடு அமையும்.சீர் எவ்வாறு பாவோசைக்கு தக்க கவிஞன் படைக்கிறான் எனவே ஆற்றல் இதனுடன் பொருந்துகிறது.விரதம் – சாதுரியமாக செய்யுள் இயற்றுவதால் இசையோடு அமைந்து இன்பம் பயக்கிறது. சீரானது மேற்கண்ட மூன்றுடன் பொருத்துவதை அறிய முடிகிறது.

**“அடியுள் ளனவே தளையோடு தொடையே”[10]**

பிற்கால யாப்பு ஆசிரியர்கள் தளை, தொடையை தனி உறுப்பாக விரித்துக் கூறுவர். தொல்காப்பியர் நாற்சீர் கொண்டதே அடியென்பார். சேமேந்திரர் குறிப்பிடும் வாக்கியம், பிரதாபந்தம் (காவியப்பொருள்), அலங்காரம், ரசம், வினைச்சொல், காலம்,இடம்,குலம், தத்துவம், கருத்து, இயல்பு, சாரச்சுருக்கம், பருவம் ( அவஸ்தா), விசாரம்(ஆய்வு),பெயர், வாழ்த்து,முதலிய பதினாறுடன் பொருந்திப்போகிறது. வாக்கியம் – தகுதிப் பாடோடியலும் சொற்றொடர் காவியத்திறனாய்விற் தேர்ந்தவர்க்கு மிகுந்த இன்பம் நல்கும். தளைதட்டாத சொற்கூட்டாக அமைப்பது. பிரதாபந்தம்(காவியப்பொருள்)பொருள்சிறப்புடன் இயற்றுவது. இதனை இசையும் பொருளும்

இணைந்த செய்யுளுடன் ஒப்பிடலாம்.பொருளுக்கு உகந்த தொடையை கையாளும் திறன். இடம் - இடத்திற்கேற்ற பொருத்தமுடன் காவியப் பொருள் நல்லுறையாடல் மூலம் எழில் பெறுதல்.யாப்புவடிவத்துடன் பொருந்த சொல் அமைப்பது. இயல்பு – செயற்கையில்லாத இயல்பான தன்மைநவிற்சி சொற்களின் பொருத்தத்தால் காவியங்கட்கு அணி மிகுகின்றது.தொடை அமைய செய்யுள் இயற்றுவது.அலங்காரம் – ஏற்ற பொருட் தகுதிப் பாடோடு கூடிய உவமை உருவகம் தற்குறிப்பேற்றம் (உத்பிரேட்சை) முதலிய அணிகளால் காவியம் ஒளிரும். ரசம் - ஒரு ரசம் முக்கியமாக இருக்கும் இடத்தில், பிரதான ரசத்தை விட்டு துணையான ரசத்தைப் பெரிதும் வருணித்தால் அவை ரச முரண்பாடு தோன்றும் சுவை பொருத்தமாக அமையாது.எனவே மெய்ப்பாடு தோன்றும்படி செய்யுளின் அடி சிறப்புடன் அமைய வேண்டும். வினைச்சொல் – இனிமை எளிமை முதலிய அழகுகள் செய்யுள் நடை பாவகை நேர்மையான இலக்கணத்தில் அமைந்த சொற்கள்.இங்கே தளை பொருந்தமாக அமைந்து ஓசையை காட்டுவது போல சொல் சிறப்பாக அமைந்து காலத்தை காட்டும். காலம் – இறந்தகாலம்,நிகழ்காலம்,எதிர்காலமென காலத்தை தெரிவிக்கும் படியான சொற்பிரயோகம் இதனை தளைதட்டாத ஓசையுடன் பா இயற்றும் திறனுடன் ஒப்பிடலாம். குலம் – இதனை தொல்காப்பியர் குறிப்பிடும் மேலோர்,கிழோர்.முறைமை மற்றும் உயர்திணை, அஃறிணை இவற்றுடன் ஒப்பிடவியலும். தத்துவம் – தத்துவ பொருத்தமான வருணனை.பொருளுக்கு உகந்த உவமையை பாவினை இயற்றல். கருத்து – தம் உட்கருத்தை வெளியிடும் சொற்கள் பொருத்தமுடன் மன மகிழ்ச்சியைத் தரும் சொற்களை அமைத்து செய்யுள் இயற்றல். இயல்பு – இயல்பாக தொடை பொருந்த செய்யுளியற்றுவதால் அணி மிகுவது. சாரச்சுருக்கம் – மொத்த செய்யுளின் மையப்பொருள் ஒரு அடியில் அமைவது .பருவம் – வயதுகேற்ற வருணனை பொருக்கேற்ற பாவகை தேர்வுடன் ஒப்பிடவியலும். விசாரம் - தகுந்த சிந்தனைகள் மூலம் கவிஞர்களின் வாக்குட்கு சிறப்புண்டாகும்.வாக்கு என்பது அடியை சுட்டலாம். ஒரு செய்யுளின் ஒரு அடி உலகோர் அனைவரும் போற்றுவது எ.கா யாதும் ஊரே யாவரும் கேளீர் என்பதுப்போல. பெயர் – எடுத்துக்கூற விரும்பும் பொருளுக்கு உகந்த பொருளை உடைய பெயரை கொண்ட வாக்கியங்களை பயன்படுத்தல். வாழ்த்து - சிறந்த பொருளை தரும் வாழ்த்து நன்மை விளைவிக்கும்.சொல்லக்கூடியதை அறிந்து சொல்லுதல் வேண்டும்.

**முடிவுரை**

தொல்காப்பியம் கூறும் நோக்கும் சேமேந்திரர் கூறும் ஔசித்தியமும் பொருந்தும் இடங்களாக மாத்திரை, எழுத்து, அசை, இவற்றுடன் பதம், குணம். காரகம்(வேற்றுமை), பால், வசனம், அடைமொழி (உரிச்சொல்) உபசர்க்க (உருபு பொருத்தம்), இடைச்சொல் (நிபாதம்), எட்டும். சீர் அடியுடன் . விரதம் (சாதுரியம்), சத்துவம், ஆற்றல் (பிரிதிபை), வாக்கியம், பிரபந்தார்ந்தம் (காவியய்பொருள்), அலங்காரம் ரசம், வினைச்சொல், காலம், இடம், குலம், தத்துவம், கருத்து, இயல்பு, சாரச்சுருக்கம், பருவம் ( அவஸ்தா), விசாரம்(ஆய்வு), பெயர், வாழ்த்து, பத்தொன்பது இடங்களும் பொருந்துகிறது. நோக்கு உறுப்புடன் இருபத்தியேழு இடங்களும் பொருந்தி அமைவதை உணரலாம். சேமேந்திரர் குறிப்பிடும் சில உறுப்புக்கள். மற்ற செய்யுளுறுப்புடன் பொருந்தும் வாய்ப்புகள் உள்ளன. நோக்குக் கோட்பாடும் படைப்பாளி - வாசகர் என்ற நிலையில் இயங்க, ஔசித்யமும் அவ்வாறு இயங்குவதை அறியமுடிகிறது. நோக்குக் கோட்பாடு வாசகர் எதிர்வினை கோட்பாடுடனும் ஒத்துப்போக வாய்ப்புகள் உள்ளன, அதுவும் ஒப்பிட்டு ஆராய தக்கது.

**சான்றெண் விளக்கம்**

1. தொல் – செய்யுளியல் – ப-514
2. யாப்பும் நோக்கும் – ப – 117
3. மேலது – ப – 115
4. ஔசித்ய விசார – ப – 4
5. தொல் – கவிதையியல் – ப -7
6. மேலது – ப – 7
7. இலக்கியக் கோட்பாடுகள் – ப -360
8. தொல் – செய்யுளியல் – ப – 44
9. மேலது – ப - 76
10. தொல் – செய்யுளியல் – ப – 169

**துணைநூற்பட்டியல்**


1. தொல்காப்பியக் கவிதையியல், இரா. சம்பத், புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்.
2. தொல்காப்பியம் எழுத்ததிகாரம், இளம்பூரணனார் உரை, சாரதா பதிப்பகம், சென்னை - 14
3. தொல்காப்பியம் செய்யுளியல், க.வெள்ளைவாரணன்,மதுரை காமராசர் பல்கலைக் கழகம் – 625021
4. தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள் – உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600113.
5. யாப்பும் நோக்கும், செ.வை. சண்முகம், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் – 608001


**References**


1. **Poetics of Tolkappiyam**, R. Sampath, Puducherry Institute of Linguistics and Culture.
2. **Tolkappiyam: Eluttatikaram** (with Ilampooranar's Commentary), Saradha Publications, Chennai - 14.
3. **Tolkappiyam: Ceyyuliyal**, K. Vellaivaranan, Madurai Kamaraj University – 625021.
4. **Tolkappiyam Literary Theories**, International Institute of Tamil Studies, Chennai – 600113.
5. **Prosody and Perspective**, S. V. Shanmugam, Meyyappan Publications, Chidambaram – 608001.


License : Copyright (c) 2025 Author : This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.